# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 21 புதன்கிழமை 05.03.2025 கதிர் 144







## கனவை நிராசையாக்கிய சிறிதரன் எம்.பி!



கொழும்பு, மார்ச் 05

வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடும் நோக்கம் தனக்கு இல்லை என இலங்கை தமிழரசு கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அறிவித்துள்ளார்.

அதோடு மாகாண சபை தேர்தல் நடாத்துவதாக இருந்தால் தேர்தல் திருத்தம் முதலில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். இது தொடர்பில் அவெ மேலும் கூறுகையில்,

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் தனிநபர் பிரேரணை கூட கொண்டுவரப்பட்டிருந்தது. ஆனால் 50 வீதம் தொகுதி மற்றும் விகிதாசார முறைக்கு தென்னிலங்கையிலும் கடும் எதிர்ப்பு எழுந்தது. கூட்டமைப்பும் அதற்கு எதிர்ப்பு வெளியிட்ட நிலையில் இழுபறியில் மாகாண சபை தேர்தல் உள்ளது.

அவ்வாறானதொரு சூழ்நிலையில் மாகாண சபை தேர்தல் நடந்தால் முதலமைச்சர் வேட்பாளராக நிற்பதற்கு தயாரில்லை எனவும் சி.சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முதலமைச்சர் வேட்பாளராக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் போட்டியிடுவார் என்றும், அதனால் ஏற்படும் வெற்றிடத்துக்கு தான் நாடாளுமன்றம் செல்ல தயாராக இருப்பதாகவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவிதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முடியாவிட்டால் நாங்கள் அடுத்த அரசாங்கத்தை பார்க்கின்றோம்!

## சாணக்கியன் பகிரங்கம்



கடந்த அரசாங்களில் செய்த தவறுகளை தட்டிக்கேட்பீர்கள் என்ற நம்பிக்கையில் தான் மக்கள் வாக்களித்துள்ளார்கள். உங்களால் முடியாவிட்டால் கூறுங்கள் நாங்கள் அடுத்த அரசாங்கத்தை பார்க்கின்றோம் என மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்றையதினம்(5) உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குள்ளே காணிகளுக்கு ஒப்பம் வழங்குவதற்கே மாநகரசபை பின் நிற்கிறார்கள்.

ஆனால் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் அபிவிருத்திகுழு தலைவர் சிவநேசத்துரை சந்திரகாந்தன் பிள்ளையான் , மட்டக்களப்பில் பிடித்த காணிகளுக்கு ஒப்பம் வழங்கியிருக்கிறீர்கள் என சாடியுள்ளார். (ஐ)

## வடக்கு மாகாணத்தை ஆளப்போகின்றேன்

### அர்ச்சுனா எம்.பி



கொழும்பு, மார்ச் 05

இலங்கையின் வடக்கு மாகாணத்தை தான் ஆட்சி செய்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அரச்சுனா தெரிவித்ததோடு , தனது கருத்துக்களை நாடாளுமன்றத்தில் தெரிவிக்க ➤

## ஆளும் கட்சி எம்.பியிடம் மன்னிப்பு கேட்ட தயாசிறி



கொழும்பு, மார்ச் 05

ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுபபினர் சுகத் வசந்த டி சில்வாவிடம் மன்னிப்பு கேட்டுள்ளார்.

நாடாளுமனறத்தின் இன்றைய அமர்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும போதே அவர் மேற்கண்டவாறு பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர்மேலும் கூறுகையில், 7➤

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ள அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம்!

கொழும்பு, மார்ச் 05

2025 வரவு செலவு திட்டத்தில்மேலதிக நேரக்கொடுப்பனவு குறைக்கப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து நாளை பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு 7➤

## ஜெரோம் மீதான பயணத் தடை நீக்கம்



கொழும்பு, மார்ச் 05

சர்ச்சைக்குரிய இலங்கை போதகர் ஜெரோம் பெர்னாண்டோ மீது விதிக்கப்பட்ட வெளிநாட்டு பயணத் தடை நீக்கப்பட்டுள்ளது.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இன்று கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட 7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -


# புதிய மின்சார கட்டண திருத்தம்– இலங்கை எதிர்கொள்ளவுள்ள இழப்பு!

கொழும்பு, மார்ச் 05

இலங்கை மின்சார சபை ஜனவரியில் ஏற்படுத்திய மின்சார கட்டண திருத்தத்தினால், மின்சாரம் உற்பத்தி செய்வதற்கான செலவு ஈடுகட்டப்படாது என்றும் இதனால் இலங்கை மின்சார சபை எதிர்கொள்ளும் இழப்புகளைத் தடுக்க முடியாது என்றும் சர்வதேச நாணய நிதியம் மதிப்பிட்டுள்ளதாக இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் சார்பில் சிரேஷ்ட தூதுக்குழு பிரதானி பீட்டர் பிரூவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இதன் விளைவாக, இலங்கை மின்சார சபையின் கடன்கள் மீண்டும் குவியும் அபாயம் இருப்பதாகவும்,



அதனால் இலங்கை மின்சார சபை மீண்டும் அரசாங்கத்திற்கு சுமையாக மாறும்.

இலங்கை மின்சார சபை அரசாங்கத்திற்கு எவ்வளவு சுமையாக இருக்கும் என்பது அனைவருக்கும் அனுபவம் உள்ளதால், வரவிருக்கும் மின்சார கட்டண திருத்தத்தில் செலவு ஈடுகட்டும் மின்சார விலையை மீண்டும் நிர்ணயிப்பது அவசியம்.

இழப்புகளை ஏற்படுத்தாத வகையில் விலைகளை நிர்ணயிப்பதற்கான தானியங்கி வழிமுறைகள் ஏற்கனவே உள்ளதாகவும், அவை செயல்பட அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## உள்ளூராட்சி மன்ற தேர்தல்– தபால் மூலம் வாக்களிப்பவர்களுக்கு தேர்தல் ஆணைக்குழுவின் அறிவிப்பு!



கொழும்பு, மார்ச் 05

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்கு தபால் மூலம் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கால அவகாசம் 03ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில்விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கால அவகாசம் எதிர்வரும் 12ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவடைவதுடன், இந்த திகதி எச்சந்தர்ப்பத்திலும் நீடிக்கப்படமாட்டாது என அறிக்கை ஒன்றை வெளியிட்டு தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூல விண்ணப்பப் படிவங்களை மாவட்ட தேர்தல் அலுவலகங்களில் அல்லது தேர்தல்ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளமான (றறற.நடநஉவைழைள.பழஎ.டம) க்கு பிரவேசித்து பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும் என ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

விண்ணப்பதாரர்கள் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை குறித்த திகதிக்குள் அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் நவீன சாதனம்!

கொழும்பு, மார்ச் 05

அமெரிக்காவில் தயாரிக்கப்பட்ட நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஸ்பீட் கன் சாதனங்கள் இலங்கை பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்றுள்ளன.

இலங்கையில் தற்போது அதிகரித்து வரும் போக்குவரத்து விபத்துகளைக் குறைக்கும் நோக்கில் இந்த நவீன சாதனம் கிடைக்க பெற்றுள்ளது.

இரவில் மிகவும் திறம்பட பயன்படுத்தக்கூடிய இந்த சாதனம், 1.2 கிலோமீட்டர் தொலைவில் வரும் வாகனத்தைப் பிடிக்கும் திறன் கொண்டது.

அத்துடன் இதன் மூலம் பதிவு செய்யப்பட்ட வீடியோவை நீதிமன்றத்தில் சாட்சியாக சமர்ப்பிக்கவும் முடியும் என்றும், வாகனத்தின் வேகம், சாரதியின் புகைப்படம் மற்றும் வாகனத்தின் இலக்கம் உள்ளிட்ட பல தகவல்களைப் பெற முடியும் என்றுஅ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## உள்ளூராட்சி தேர்தல் திட்டமிடல்– தேர்தல்கள் ஆணைக்குழுவில் இடம்பெறவுள்ள கலந்துரையாடல்!

கொழும்பு, மார்ச் 05

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் திட்டமிடவும், அவை தொடர்பாக எழும் பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடவும் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மற்றும் மாவட்ட உதவி தேர்தல் ஆணையர்கள் கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

அதன்படி எதிர்வரும் சனிக்கிழமை (08) தேர்தல்கள் ஆணைக்குழுவில் கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளதாக தேர்தல் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட) எல்ட்டி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# "நுகர்வுக்குப் பொருத்தமற்ற தேங்காய் எண்ணெய் விற்பனை"



கொழும்பு, மார்ச் 05

மனித நுகர்வுக்குப் பொருத்தமற்ற அசுத்தமான தேங்காய் எண்ணெய் உள்ளூர் சந்தையில் நுழைந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"சுத்திகரிக்கப்படாத தேங்காய் எண்ணெயைப் பெற்று உள்ளூர் சந்தையில் விற்பனை செய்வதில் இறக்குமதியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்" என்று நாடளு மன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி சபையில் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் கூறினார்.

"சில இறக்குமதி நிறுவனங்கள் கணிசமான வருவாய் ஈட்டிய பின்னர் 11 மாதங்களில் செயல்படாமல் போய்விட்டன" என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் திருத்தப்படும் என்றும், மோசடிகளைத் தடுக்க வலுவான விதிகள் மற்றும் விதிமுறைகள் கொண்டுவரப்படும் என்றும் அவர் கூறினார்.

# யால தேசிய பூங்காவின் சில வீதிகள் மீண்டும் திறப்பு



கொழும்பு, மார்ச் 05

தற்காலிகமாக மூடப்பட்டிருந்த யால தேசிய பூங்கா வின் சில வீதிகளை இன்று பிற்பகல் 2 மணி முதல் மீண்டும் திறக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாக வன விலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக பெய்த கனமழை காரணமாக யால தேசிய பூங்காவின் வீதி அமைப்புக்கு ஏற்படும் சேதத்தை குறைப்பதற்கும், அதன் மூலம் அங்குள்ள சுற்றுச்சூழல் அமைப்புக்கு ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்கும், மார்ச் 01 ஆம் திகதி முதல் யால தேசிய பூங்காவை தற்காலிகமாக மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இருப்பினும், மழை காரணமாக சேதமடையக் கூடிய வீதிகள் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளுக்கு மூடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

இன்று காலை யால தேசிய பூங்காவில் பெய்யும் மழையின் அளவைப் பொறுத்து இந்த நிலைமையில் சில மாற்றங்கள் ஏற்படலாம் என்று வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் தெரிவித்துள்ளது

# சித்துப்பாத்தி இந்து மயான விவகாரம்: நீதிமன்றம் அதிரடி உத்தரவு



கொழும்பு, மார்ச் 05

யாழ்ப்பாணம், அரியாலை பகுதியில் உள்ள சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதிக்கு பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமான கண்காணிப்பு பணிக்கு மயான அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் ஐவரை நியமிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்தில் மனித எலும்புக்கூட்டு எச்சங்கள் மீட்கப்பட்டமை தொடர்பான வழக்கினுடைய கலந்தாய்வு யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா தலைமையில், செவ்வாய்க்கிழமை (04) நடைபெற்றது

குறித்த கலந்துரையாடலில் காணாமல் ஆக்கப்பட்டோர் சார்பில் சட்டத்தரணி தற்பரனும் முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணி சுகாசும், நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், மயான அபிவிருத்தி குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

குறித்த எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்ட மயானத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு உரிய வகையில் வழங்கப்பட வேண்டும் என்றும் பொலிஸ் பாதுகாப்புக்கு மேலதிகமாக குறித்த மயானத்தினுடைய அபிவிருத்தி சங்கத்தின் உறுப்பினர்களுக்கும் பாதுகாப்பு பணியை மேற்பார்வை செய்வதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என சட்டத்தரணிகளால் கோரப்பட்டது.

இதனை ஆராய்ந்த நீதவான், மயான அபிவிருத்தி சங்கத்தின் சார்பில் ஐந்து உறுப்பினர்களை பணியில் ஈடுபடுத்த அனுமதி வழங்கினார். வழக்கு தொடர் விசாரணைக்காக திகதியிடப்பட்டது. (ஐ)



# விபூதிப் புதனுடன் தவக்காலம் ஆரம்பம்

இயேசு கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு ஆகியவற்றை நினைவுகூரும் தவக்காலம் புதன்கிழமை (04) ஆரம்பமாகிறது. மண்ணால் படைக்கப்பட்ட மனிதன் மீண்டும் மண்ணுக்குத் திரும்புவான் என்பதை நினைவுபடுத்தும் விதமாக விபூதிப் புதனன்று கத்தோலிக்கர்கள் நெற்றியில் விபூதி பூசப்படுகின்றது.

விபூதிப்புதன் முதல் இயேசு கிறிஸ்துவின் உயிர்ப்பு வரையில் இந்த தவக்காலம் அனுஷ்டிக்கப்படுகின்றது. மனமாற்றத்தின் காலமான தவக்காலத்தில் நோன்பு இருத்தல், ஒறுத்தல்கள், ஜெபங்கள் தவங்கள் போன்ற நல்ல காரியங்களில் ஈடுபடுவர்.

விபூதிப் புதன் அல்லது சாம்பல் புதன், கத்தோலிக்க மக்கள் தேவாலயம் சென்று வழிபட வேண்டிய முக்கியமானதும் கட்டாயமானதுமான கடன் திருநாளாகும். இதைச் சகோதரத்துவத்தின் நாள் என்றும் கூறுவார்கள்.

எல்லா மதங்களின் தத்துவத்திலும் இருக்கும் நிலையாமையை உணர்ந்து, இறைவனுடன் இணைய அழைப்பதை விபூதிப் புதன், கிறிஸ்தவ மதத்திலும் வலியுறுத்துகிறது.

கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கும் 40 நாட்கள் தவக்காலம் என்பது இந்த விபூதிப்புதன் தினத்திலிருந்தே தொடங்குகிறது. இயேசு சிலுவையில் மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மூன்றாம் நாள் உயிர்த்தெழும் உயிர்த்த ஞாயிறு பெருவிழாவுக்கு முந்தைய நாற்பது நாள்களையும் தவக்காலமாகப் பின்பற்றப்படுகிறது.

தவக்காலம் என்பது கடந்தகாலத்தில் செய்த தவறுகளை உணர்ந்து திருந்தவும் மீண்டும் தவறுகளைச் செய்யாமல் உறுதியெடுத்துக்கொள்ளவும் மனம் வருந்தி, ஒறுத்தல் மூலமும் உண்ணா நோன்பு இருந்து நம்மை நாமே தூய மனிதர்களாகத் தயார் செய்துகொள்ளக் கடவுளால் தரப்பட்டிருக்கும் காலம் எனக் கொள்ளலாம். இந்தத் தவக்காலத்தில் மூன்று முக்கிய அம்சங்களை அதாவது, நோன்பிருத்தல், இறை வேண்டல், அறச் செயல்கள் (செபம், தபம், தர்மம்) புரிதல் போன்றவற்றை விசேசமாகக் கத்தோலிக்கர்கள் கடைப் பிடிப்பர்.

நோன்பிருந்து உணவைத் தள்ளிவைத்து உடலை வருத்துவ தோடல்லாமல் செபத்தின்வழி, இறைவனோடு உறவாடி தம் குற்றம் குறைகளையும் பலவீனங்களையும் தவறுகளையும் உணர்ந்து மனமாற்றம் பெறும் தருணம் ஆகும். பிறருக்கு உதவவும் இருப்பதைப் பிறருக்குக் கொடுத்து, பிறரோடு பகிர்ந்து கொண்டு, தர்ம காரியங்களில் ஈடுபடுவதற்குக் கட்டாயப்படுத்தப்பட்ட ஒப்பற்ற காலமாகும்.

நோயாளிகளைப் பார்த்து அவர்களது மனக்குறைகளைக் கேட்டறிந்து மனிதநேயத்துடன் வாழும் காலமாகும். 'தன்னைப் போல் பிறனையும் நேசி' என்ற இயேசு பெருமானின் கருத்தை உள்ளத்தில் கொண்டு உலகிலுள்ள மானிடர் அனைவரும் என் சகோதரர்கள் என் சகோதரிகள் என்ற உறவோடும், உணர்வோடும் வாழத் தூண்டுவதும் இத்தவக் காலத்தின் நோக்கமாகும்.

குருத்தோலை ஞாயிறன்று வழங்கப்படும் ஓலைகளைச் சிலுவை செய்து, வீடுகளில் ஒரு வருடம் வரையில் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் மக்கள், அதனை விபூதி தினத்துக்கு முன் ஆலயத்தில் கையளிப்பார்கள். அந்த ஓலைகளை எரித்துப் பெறப்படும் சாம்பலே 'சாம்பல் புதன்' தினத்தில் நெற்றியில் பூசப் பயன்படுகிறது.

விபூதி புதனன்று தேவாலயத்துக்கு வரும் ஒவ்வொரு பக்தரின் நெற்றியிலும் "மகனே/மகளே நீ மண்ணாக இருக்கின்றாய், மீண்டும் மண்ணுக்கே திரும்புவாய் என்பதை மறவாதே" என்று கூறி, குருவானவர் சாம்பலினால் நெற்றியில் சிலுவை அடையாளம் வரைகிறார்.

உலக மீட்பர் இஜேசு கிறிஸ்து, சிலுவை மரணத்துக்குத் தன்னை ஒப்புக்கொடுக்கும் நிகழ்வுக்கு முன்பு, தனது மரணத்தை அறிந்து, ஒரு மனிதனாக வேதனை கொண்டு, நாற்பது நாள்கள் இரவும் பகலும் உண்ணாமல் வனாந்தரத்தில் நோன்பு இருந்தார். அந்த நோன்பின்போது, தனக்கு வரப்போகும் பாடுகளை எதிர்கொள்ள மனத்திடம் தரும்படி தனது தந்தையை நோக்கி இரந்து கேட்பதை வேதாகமத்தில் காணலாம். கிறிஸ்துவின் இந்தத் துயர அனுபவத்தில் இணையும் நோக்கத்தோடும் தவக்காலத்தைக் கிறிஸ்தவர்கள் கடைபிடிக்கிறார்கள். தவக்காலத்தில் ஆடம்பர அணிகலன்கள், மாமிச உணவு, கேளிக்கை, பொழுதுபோக்கு இவற்றை வெறுத்து ஒதுக்கி, அதன் மூலம் மிச்சப்படுத்தப்படும் பணத்தை ஏழைகளுக்கு வழங்குவதைக் கிறிஸ்தவர்கள் வழக்கமாக கடைபிடித்து வருகிறார்கள். இத்தவக்காலம் பொருளுள்ள காலமாக அமைந்திட, அநீதிகளையும் தீயவற்றையும் இனம்காணும் மனமாற்றம் பெற்று, கிறித்துவை அடையாளம் காணும் அருளைப் பெற, ஆண்டவன் அருளை இறைஞ்சி மன்றாடுவோம்.

(ஐ)

# தமிழ்மொழியை வளர்க்க நீங்க செய்த சாதனைகளை சொல்லுங்கள் முதல்வருக்கு அண்ணாமலை கேள்வி

தமிழ்மொழியை வளர்க்க நீங்க செய்த சாதனைகளை என்னென்ன? என முதல்வர் ஸ்டாலினுக்கு அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார்.

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில், ' தமிழ் மீது பிரதமர் மோடி மிகுந்த மதிப்பு வைத்திருக்கிறார் என்றும், மாநில மொழிகளின் வளர்ச்சிக்காகத் தான் மும்மொழிப் பாடத் திட்டத்தை வலியுறுத்துகிறோம் என்றும் சொல்கின்ற பா.ஜ., வினர் தங்கள் ஆட்சியில் தமிழுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கி றார்கள்? சமஸ்கிருதத்திற்கு எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறார்கள்? என்ற வேறு பாடே, அவர்கள் தமிழ்ப் பகைவர்கள் என்பதை வெளிச்சமிட்டுக் காட்டிவிடும் ' என குற்றம் சாட்டியிருந்தார்.

இதற்கு பதில் அளித்து, தமிழக பா.ஜ., தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: மத்தி யிலும், மாநிலத்திலும் ஆட்சியில் இருந்த போது, தமிழகத்தில் எல்லைகள் கடந்து தமிழ் மொழியை வளர்க்க நீங்கள் செய்த சாதனைகள் என்னென்ன? தமிழ் மொழி தமிழகத்தின் எல்லைகளுக்குள்ளேயே இருக்க வேண்டும் என்பதே உங்கள் எண்ணம். தமிழின் கலாசாரத்தையும், பண்பாட்டையும் பரப்ப பிரதமர் மோடி செய்ததில் பாதியாவது நீங்கள் செய்தீர்களா? தமிழகத்தில் முதல் ஹிந்தி ஆசிரியர் பயிற்சி கல்லூரி 1922ம் ஆண்டு ஈரோட்டில் துவங்கப்பட்டது. சமஸ்கிருதம் மொழிக்கு அதிக ரூபாய் ஒதுக்கியதாக கூறும் நீங்கள் (முதல்வர் ஸ்டாலின்), அப்போது என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? ஹிந்தியை நாடு முழுவதும் பிரபலப்படுத்த முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் 170க்கும் மேற்பட்ட பரிந்துரைகளை சமர்ப்பித்த போது நீங்கள் என்ன செய்து கொண்டிருந்தீர்கள்? இவ்வாறு முதல்வருக்கு அண்ணாமலை சரமாரி கேள்வி எழுப்பி உள்ளார். (ஐ)



# ஹிந்தியை ஒழிக்கவே நேரமில்லை இதையெல்லாம் கவனிக்க ஏது நேரம்!



திருநெல்வேலியில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மைய கட்டடம் பயன்பாடு இன்றி வீணாக புதர் மண்டி கிடக்கிறது. கலெக்டர் அலுவலகத்தில் 2 நாள் நடக்கும் ஆட்சி மொழி கருத்தரங்கை இந்த மையத்தில் நடத்தலாம் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

திருநெல்வேலியில், தமிழ் வளர்ச்சி துறையின் சார்பில் நிகழ்வுகள் நடத்துவதற்காக என்.ஜி.ஓ.காலனி, உழவைச் சாலையில் தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மையம் கட்டப்பட்டுள்ளது. சுமார் 50 சென்ட் நிலப்பரப்பில் அமைந்த இந்த கட்டடம், தரைத்தளத்தில் 5000 சதுர அடி, முதல் மாடியில் 5000 சதுரஅடி என மொத்தம் 10,000 சதுரஅடி பரப்பளவைக் கொண்டுள்ளது.

திருநெல்வேலி புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் அமைந்துள்ளதால், இது தமிழ் வளர்ச்சி துறை மட்டுமின்றி, தமிழ் இலக்கிய, பண்பாட்டு நிகழ்வுகள் நடைபெறுவதற்கும் ஏற்றதாக இருந்தது. ஆனால், கடந்த சில ஆண்டுகளாக இந்த மையம் செயல்பாடின்றி உள்ளது. பண்பாட்டு மையத்தின் தலைவராக மாவட்ட கலெக்டர், செயலாளராக தமிழ் வளர்ச்சி துறை துணை இயக்குநர் உள்ளனர்.

இணைச் செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள் போன்ற பலர் நிர்வாகத்தில் இருந்தாலும், மையம் தற்போது பயன்பாடு இன்றி கிடக்கிறது. தற்போது, தமிழக அரசு சார்பில் ஆட்சி மொழி கருத்தரங்குகள் திருநெல்வேலி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்று வருகின்றன.

இத்தகைய நிகழ்வுகளை தமிழ் வளர்ச்சி பண்பாட்டு மையத்தில் நடத்தினால், கட்டடம் மீண்டும் பயன்பாட்டிற்கு வரும். மேலும், நூல் வெளியீடுகள், இலக்கிய நிகழ்வுகளுக்காக இந்த மையத்தை மீண்டும் செயல்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

கலெக்டர் அலுவலகத்தில் 2 நாள் நடக்கும் ஆட்சி மொழி கருத்தரங்கை இந்த மையத்தில் நடத்தலாம் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர்.

# குலசையில் ராக்கெட் ஏவுதளம் அமைக்கும் பணி



குலசேகரப்பட்டினம் ராக்கெட் ஏவுதளத்தில் பூமி பூஜையுடன் பணிகளை இஸ்ரோ தொடங்கி உள்ளது. அடுத்தாண்டு பணிகள் முழுமையாக நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இஸ்ரோ எனப்படும், இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்திற்கு,ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில், சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையம் உள்ளது. அங்கு இரு ராக்கெட் ஏவுதளங்கள் உள்ளன. விண்வெளி திட்டங்களில் தொடர்ந்து இஸ்ரோ வெற்றிக் கொடி நாட்டுவதால் பல நாடுகளும், இஸ்ரோ வாயிலாக செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த ஆர்வம் காட்டுகின்றன. இதற்காக கூடுதல் ராக்கெட் ஏவுதளம் அமைக்க இஸ்ரோ முடிவு செய்து, நாடு முழுதும் பல்வேறு இடங்களில் ஆய்வுகள் நடத்தியது. அதன் அடிப்படையில், காற்றின் வேகம் குறைவு, மழைப்பொழிவு குறைவு, புவி வட்ட பாதைக்கு மிக அருகில் இருப்பது உள்ளிட்ட காரணங்களால் குலசேகரன்பட்டினம் தேர்வானது.

# தொகுதி மறுசீரமைப்பால் தென் மாநிலங்களின் அரசியல் உரிமைக்கு அச்சுறுத்தல்: ஸ்டாலின்

சென்னை் தொகுதி மறுசீரமைப்பின் மூலம் தொகுதிகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டால் அது தமிழகத்துக்கு கிடைக்கிற அரசியல் பிரதிநிதித்துவ உரிமை மீதான நேரடி தாக்குதல் என்று முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார். சென்னையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிகள் கூட்டத்தில் அவர் பேசிய உரையின் விவரம்: தமிழகம் மிகப்பெரிய உரிமை போராட்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளதை உணர்த்துவதற்காக தான் இந்த அனைத்துக் கட்சி கூட்டத்துக்கு ஏற்பாடு செய்துள்ளோம். தொகுதி மறுசீரமைப்பு என்னும் கத்தி தென்னிந்தியாவின் தலைக்கு மேல் தொங்கி கொண்டு இருக்கிறது.

இதனால் தமிழகம் கடுமையாக பாதிக்கப்பட இருக்கிறது. இன்று தமிழகத்தில் 39 லோக்சபா தொகுதிகள் உள்ளன. இதை குறைக்கும் அபாயம் இப்போது நெருங்கிக் கொண்டு இருக்கிறது. மத்திய அரசு 2026ம் ஆண்டில் லோக்சபா தொகுதிகளின் எண்ணிக்கையை மறு சீரமைப்பு செய்ய உள்ளது. பொதுவாக இதை, மக்கள்தொகையை கணக்கிட்டுத்தான் செய்வர்.

மக்கள் தொகையை கட்டுப்படுத்த வேண்டும் என்பது நாட்டின் மிக முக்கியமான இலக்கு. இந்த இலக்கில் தமிழகம் வெற்றி பெற்றுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் வெற்றிக்கரமான குடும்ப கட்டுப்பாட்டு திட்டங்கள், பெண்கள் கல்வி மற்றும் சுகாதார முன் முயற்சிகள் மூலம் நாம் இதை சாதித்துள்ளோம்.

இப்போது இருக்கும் 543 லோக்சபா தொகுதிகள் தொடர்ந்தால் மக்கள் தொகை குறைவாக இருப்பதினால், நம்முடைய தொகுதிகள் எண்ணிக்கை குறைக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. தமிழகம் மொத்தமாக 8 லோக்சபா இடங்களை இழக்கும் என்று சொல்கின்றனர். இப்போது இருக்கும் 39 தொகுதி எம்.பி.,க்கள் கிடைக்க மாட்டார்கள். லோக்சபா தொகுதிகள் எண்ணிக்கை 848 ஆக உயர்த்தப்பட்டு தற்போதுள்ள விகிதாச்சார அடிப்படையில், மறு சீரமைப்பு செய்யப்பட்டால் நமக்கு கூடுதலாக 22 தொகுதிகள் கிடைக்க வேண்டும்.

ஆனால் தற்போதுள்ள மக்கள் தொகையின் படி மறு சீரமைப்பு செய்தால் 10 தொகுதிகள் தான் கூடுதலாக கிடைக்கும். இதனால் நாம் 12 கூடுதல் தொகுதிகளை இழக்க நேரிடும். இந்த 2 முறைகளிலுமே நமக்கான பிரதிநிதித்துவம் குறைந்து, அதிகம் தொகுதிகள் கொண்ட மாநிலங்களுக்கு அதிக பிரதிநிதித்துவம் கிடைக்கும்.

இது வெறும் வெறும் உறுப்பினர்கள் எண்ணிக்கை பற்றிய கவலை இல்லை. இது தமிழகத்தின் உரிமை சார்ந்த கவலை. தமிழகம் எதிர்கொள்ள வேண்டிய முக்கியமான பிரச்னையில் எல்லா அரசியல் கட்சிகள், தலைவர்கள் ஒன்றிணைய வேண்டும் என்ற வேண்டுகோளை உங்கள் எல்லாம் முன்னிலையிலும் நான் வைக்கிறேன். அனைத்துக் கட்சிகளும் கட்சி எல்லைகளை கடந்து குரல் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மக்கள் தொகை அடிப்படையில் மறு சீரமைப்பு செய்தால் அது தமிழகத்தின் மக்கள் பிரதிநிதித்துவத்தை எண்ணிக்கையை குறைத்துவிடும். எனவே இந்த சதியை நாம் அனைவரும் சேர்ந்து முறியடித்தாக வேண்டும். மக்கள் தொகை அடிப்படையில் லோக்சபா, ராஜ்ய சபா இடங்கள், சட்டசபை தொகுதிகள் குறையும் என்று சொல்வது மக்கள் தொகை கட்டுப்பாடு என்னும் கொள்கையை முனைப்பாக செயல்படுத்தி, நாட்டு வளர்ச்சியில் பெரும் பங்காற்றி உள்ள தென் மாநிலங்களுக்கு தரப்படுகிற தண்டனையாக தான் அமையும்.

இதை முன்கூட்டியே உணர்ந்து கடந்தாண்டு பிப்.14ம் தேதி தமிழக சட்டசபையில் நாம் தீர்மானத்தை நிறைவேற்றினோம். தமிழகத்தின் உரிமை, கூட்டாட்சி கருத்தியலின் கோட்பாடு தமிழக பிரதிநிதித்துவம் உள்ளிட்ட எதுவும் பாதிக்கப்படக்கூடாது என தீர்க்கமாக, திடமாக அப்போது நாம் வலியுறுத்தி இருக்கிறோம்.

இந்த தொகுதி மறுசீரமைப்பு என்பது தமிழகத்துக்கு மட்டுமல்ல, ஒட்டு மொத்த தென்னிந்தியாவுக்கு அபாயமான செயல்.

இதில் நமக்குள்ளே கருத்து மாறுபாடு நிச்சயமாக இருக்காது என்று நினைக்கிறேன். இருக்கக்கூடாது என்று விரும்புகிறேன். இந்திய நாட்டின் கூட்டாட்சி அமைப்புக்கும், தென் மாநிலங்களின் அரசியல் உரிமைக்கும் இது அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. இது இந்திய ஜனநாயகத்தின், தமிழகத்துக்கு கிடைக்கிற அரசியல் பிரதிநிதித்துவ உரிமை மீதான நேரடி தாக்குதல். இப்படி ஒரு சமநீதியற்ற,

அநீதியான தொகுதி மறு சீரமைப்பு செயல்படுத்தப்பட்டால் இந்திய அரசிய லில் தமிழகத்தின் குரல் நெறிக்கப்படும். தமிழகத்தின் நலன் மற்றும் தமிழக மக்களின் நலன் ஆகியவற்றை பாதுகாப்பதில் மாநிலத்தில் இருக்கக்கூடிய பலம் குறைக்கப்படும். 39 எம்.பி.,க்கள் இருக்கும் போது, நாம் எழுப்ப இருக்கிற குரலையே மத்திய அரசு ஏற்க மறுக்கிற நிலையில் இந்த எம்.பி.,க்கள் எண்ணிக்கை இன்னும் குறைந்தாலோ அல்லது குறைக்கப்பட்டாலோ அது தமிழகத்துக்கு இழைக்கப்பட்ட, அழிக்கமுடியாத அநீதியாக மாறும் என்பதை எல்லோரும் நினைத்து பார்க்க வேண்டும். எனவே நம்முடைய நிலைப்பாட்டை அழுத்தம் திருத்தமாக ஒரே சிந்தனையோடு எடுக்க வேண்டும். வர இருக்கும், இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

# உடை உடலுக்கு மட்டுமே!



## உடல், உடை, சர்ச்சை!

**பெண்** உடலும் உடையும் அப்பெண்ணுக்கு உரித்தானது இல்லை. அந்தப் பெண்ணின் மானமும் குடும்பக் கௌரவமும் அவற்றில்தான் பொதிந்துள்ளது என்பதாக, நம் சமூகத்தால் அழுத்தமாகக் கட்டமைக்கப்பட்டிருப்பது பெண்ணை அடிமைத்தனத்தில் கட்டிப்போட என்பது புரியாமல், பெண்களும் அதற்குள் கட்டுண்டு போய் தங்களைப் பலி கொடுத்து வருவது தொடர்கிறது.

சமூக வலைத்தளத்தின் தாக்கத்தால் பல நல்லவையும் அல்லவையும் சேர்ந்தே பரவி வரும் நிலையில், இங்கும் பெண் உடல், உடை சார்ந்த பிரச்சினைகள் பெரும் பேசு பொருளாக அவ்வப்போது சர்ச்சைகளைக் கிளர்த்தி வருகின்றன. பெண்ணின் உடை குறித்தான சர்ச்சைகள் எழும்போதெல்லாம் அதில் ஆண்கள் அதிகளவில் பண்பாடு, கலாசாரம் எனப் பொங்குவதைப் பார்க்க முடியும்.

ஒரு பெண்ணின் உடலையும் உடையையும் மையமாக வைத்து நடத்தப்படும் ஒடுக்குமுறை ஆணுக்கு நடக்கிறதா? ஆணின் அரை நிர்வாணம் என்றாவது கேள்விக்குள்ளாக்கப்படுகிறதா? பெரும்பாலும் இல்லை. காரணம் ஆணின் அரை நிர்வாணத்தை யாரும் பாலுறவுடன் தொடர்புபடுத்தி பார்ப்பதில்லை. ஆனால், பெண்ணின் அரை நிர்வாணம் பாலுறவுடன் மட்டுமே தொடர்புபடுத்தி பார்க்கப்படுகிறது. அதனால்தான் பிரேசிலின் பெண் அமைச்சர் பாராளுமன்ற அமர்வு நடக்கும்போது தனது குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுத்தது பூதாகரமாக ஆண் சமூகத்தால் பேசப்பட்டது. அமைச்சராக அவர் என்ன பேசினார்? அவரது கருத்தின் மீதான நிறை, குறைகள் என்ன என்பதெல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு அவர் அரை நிர்வாணமாக, கவனம் ஈர்க்கவே அவ்வாறு செய்தார் என மெத்தப் படித்த பலராலேயே விமர்சிக்கப்படுகிறது.

பெண்ணின் மார்பு கவர்ச்சியானது. பாலியலுடன் தொடர்புடையது என்பதைத் தாண்டி சிந்திக்க முடியாத அளவு நம் சிந்தனை முடமாகிப் போய் இருப்பது எவ்வளவு வருத்தத்திற்குரியது. இயற்கையை ஒட்டி வாழ்க்கை வாழ்ந்து வரும் பல இனத்தவர்கள் குழந்தைக்குப் பால் கொடுப்பதை ஒளித்து மறைத்து செய்வதில்லை. ஆனால், நாகரிகமான சமூகம் எனப் பீற்றிக்கொள்பவர்களில் பலரும் அனைத்து விஷயங்களையும் பாலியலுடன் தொடர்புபடுத்தி சர்ச்சைகளை உருவாக்குகின்றனர்.

பெண்ணின் உடை பற்றி விமர்சிக்காத ஆண்களே இல்லை. பெண்களும்தாமே என்பவர்களுக்கு அவர்களும் ஆணால் கட்டியமைக்கப்பட்ட, ஆண் மைய சமூக அமைப்பை ஏற்றுக்கொள்ளப் பழக்கப்பட்ட பெண்கள் என்பதைச் சுலபமாக மறந்து விடுகிறார்கள். ஒரு பெண்ணுக்கு உடை குறித்த அழுத்தம் அவளுக்குள் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது பலரால் உணரப்படுவதே இல்லை.

பெண்கள் உடல் வெளியே தெரிந்துவிட்டால் அவள் உயிர் வாழக் கூடாது, கணவனுக்கு மட்டுமே அவள் உடல் உரித்தானது, அதை அந்நிய ஆண்கள் பார்த்துவிட்டாலே அவள் வாழத் தகுதியற்ற பெண் போன்ற பத்தாம்பசலித்தனமான கருத்துகள் இன்றும் கண்மூடித்தனமாகப் பின்பற்றப்படுவதால் எத்தனை உயிர்கள் பறிபோகின்றன?

உயிரே போனாலும் வீட்டுப் பெண்கள் ஆடை விலகக் கூடாது என்று மூர்க்கமாக அறநெறி வகுக்கும் ஆண்கள், அதை ஆமோதிக்கும் பெண்கள், வீட்டுப் பெண்கள் அல்லாது பிற பெண்களின் நிர்வாணத்தைத் திரையிலும், சந்தர்ப்பம் அமையும் போது திரை மறைவிலும் ரசிப்பதைக் கண்டும் காணாமல் இருப்பது என்ன மாதிரி அயோக்கியத்தனம். இந்த அயோக்கியத்தனத்தை கலாசாரம், பண்பாடு என

“பெண்ணின் உடை பற்றி விமர்சிக்காத ஆண்களே இல்லை. பெண்களும்தாமே என்பவர்களுக்கு அவர்களும் ஆணால் கட்டியமைக்கப்பட்ட, ஆண் மைய சமூக அமைப்பை ஏற்றுக்கொள்ளப் பழக்கப் பட்ட பெண்கள் என்பதைச் சுலப மாக மறந்து விடுகிறார்கள். ஒரு பெண்ணுக்கு உடை குறித்த அழுத்தம் அவளுக்குள் எத்தகைய தாக்கங்களை ஏற்படுத்தும் என்பது பலரால் உணரப்படுவதே இல்லை.”

எவ்வளவு அழகாக மறைக்கிறது.

ஏன் பெண்களுக்கு மட்டும் எப்போதும் உடல் பற்றியும் ஆடை பற்றியும் பிரக்ஞை என்ற கேள்வி பூதாகரமாக இருந்து வருகிறது.

சமீபத்தில் யுஐ மூலமாகப் பெண்ணின் சாதாரண புகைப்படம், முகம் மட்டும் இருந்தால்கூடத் துல்லியமாகப் பெண்ணின் நிர்வாண உடலுடன் மார்பிங் செய்யப்பட்டு பொதுவெளியில் பகிரப்படும் அபாயம் இருக்கிறது, ஆகவே பெண்களே எச்சரிக்கையாக இருங்கள் என்கிற செய்தி சமூக வலைத்தளத்தில் பரவி வருகிறது. அதுவும் பெண்ணுக்குதான் எச்சரிக்கை. ஒரு பெண்ணின் புகைப்படம் அல்லது முகம் தெரியாமல் சமூகத்தில் வலம் வர முடியுமா? தொழில் நுட்பம் வெகுவாக முன்னேறியிருக்கும் இந்தக் காலத்தில் ஒரு பெண்ணின் புகைப்படம் கிடைப்பது மிக அரிதான விஷயமா?

தொழில்நுட்பம் வெகுவாக முன்னேறியிருக்கும் இந்தக் காலத்தில் ஒரு பெண்ணை ஆபாசமாகப் படம் எடுப்பது ஒன்றும் பிரம்ம பிரயத்தனமல்ல. அதற்காக முக்காடிட்டுக் கொண்டே அலைய முடியாது. மார்பிங் செய்யப்பட்ட படமென்றாலும் அல்லது உங்களையே எடுத்த படமென்றாலும் அதைப் பற்றிக் கவலைப்படாமல் துணிந்து ஆமாம் என் உடம்புதான் எல்லாப் பெண்களுக்கும் இயற்கையாக அமைந்ததுதான் எனக்கும். என்ன “பப்ளிக்கா போடுவியா போட்டுக்கோ” என்று பெண்கள் என்று துணிந்து சொல்லத் தொடங்குகிறார்களோ அன்றுதான் இந்த ஆபாச படம் மார்பிங் பிரச்சினை ஒழியும்.

முதலில் கடினம்தான். ஆனால், இருவர் துணிந்து இறங்கி, இந்த அடக்குமுறைக்குப் பெண் அடிபணிய மாட்டாள் என்கிற எண்ணத்தை விதைத்தாலே பாதி வெற்றி.

இந்தச் சமூக வலைத்தளத்தில் இயங்கும் ஆண்களின் தோழியோ உறவினரோ, அவருக்குத் தெரிந்தவரின் ஒளிப்படம் வெளியானால், அந்தப் பெண்ணை அதைரியப்படுத்தாமல் தைரியமாக எதிர்கொள்ளக் கற்றுக் கொடுக்கலாம். மாறாக “ஏன் புகைப்படம் போடுகிறீர்கள்?” என்றோ “கண்டவனோடு பழகினா இப்படிதான்” என்றோ குற்றப்பத்திரிக்கை வாசிக்காதீர்கள்.

உடல் உயிரைச் சுமக்கும் சாதனம் என்பதை முதலில் பெண்கள் புரிந்து கொள்ளுங்கள். புரிந்து கொள்ளாத ஆண்களும் புரிந்து கொள்ள முயற்சிப்பது ஒன்றுதான் இதற்குத் தீர்வாக இருக்க முடியும்.

நம்மை அறியாமல் எடுக்கப்படும் படமாக இருக்கட்டும், அல்லது நாமே பகிர்ந்த படமாக இருக்கட்டும். அது ஓர் ஒளிப்படம் என்பதைத் தாண்டி அதற்கு அதிகளவு முக்கியத்துவம் தர தேவையில்லை. சமூகம் அதற்கு கொடுக்கும் முக்கியத்துவம்தான் ஒரு பெண்ணைக் குற்ற உணர்வுக்கு ஆளாக்கி, சில நேரம் தற்கொலை வரை கொண்டு போய்விடுகிறது.

பெண்ணிற்குச் சிறு வயதில் இருந்து உடை இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் உடை முழு உடலையும் மறைக்க வேண்டும். உடல் ஒருவருக்கு மட்டுமே சொந்தமானது என்கிற ரீதியில் அவளுக்குள் சிறுவயதில் இருந்தே திணிப்பதைத் தவிருங்கள். அது பெண்ணை உடலாகப் பார்க்கக் கட்டாயமாக்கப்பட்டு, அவளையறியாமல் பெருஞ்சுமையாக இறக்கும் வரை சுமக்கிறாள் என்பதை உணர முற்படுங்கள்.

இதனால்தான் அவள் நிர்வாணம், அரை நிர்வாணம் அவளையறியாமல் வெளியிடப்படும் போது உடைந்து போகிறாள். உயிர் வாழவே தகுதியற்ற மிகப்பெரும் அவமானம் நேர்ந்து விட்டதாக வாழ்க்கையை முடித்துக்கொள்ள நினைக்கிறாள். அது மட்டுமல்ல

இதனால் அவளுக்கு ஏற்படும் மார்பகப் புற்றுநோய் உட்பட பல உடல் ரீதியான உபாதைகளை அவள் வெளியில் சொல்லாமல், அது முற்றி மரணத்தில் போய் முடிவது நம் சமூக அமைப்பில் சர்வ சாதாரணமான ஒன்று.

ஒரு பெண் தன் உடல் உபாதையைக்கூட வெளியில் சொல்ல முடியாத, காண்பிக்க முடியாத மன நெருக்கடி எதனால்? ஒரு பெண் சுயநினைவு இல்லாமல் இருக்கும்போது அல்லது உடல்நிலை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கும்போதுகூட முதலில் அவள் கண்விழித்தவுடன் உடைகளைச் சரி செய்ய கைகள் நீள்வது எதனால்? ஒரு சைக்கிளில் இருந்தோ பைக்கில் இருந்தோ கீழே விழும்போதுகூட அடிபட்டதை முதலில் கவனிக்காமல் உடையைக் கவனிப்பதைப் பார்த்து இருக்கிறீர்களா? உடலைத் தாண்டி உடை பற்றிய சிந்தனை அவள் மனதில் எந்த அளவு ஆழப் பதிந்திருந்தால் இது சாத்தியம்?

மானம், கௌரவம் எல்லாமே முக்கியம்தான், ஆனால் அதைவிட உயிரும் பாதுகாப்பும் முக்கியம் என்பதை குழந்தைகளிலிருந்து சொல்லிக் கொடுத்து வளர்ப்போம். உடை உடலுக்கு மட்டுமே, ஆனால் அந்த உடையை பெண்ணின் ‘கை விலங்காக’ மாற்றிய தால்தான் சில பெண்கள் சுதந்திரத்தின் அடையாளமாக உடையைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எதிலும் காட்ட முடியாமல் அடக்கப்பட்ட சுதந்திர உணர்வை உடையில் காட்டி தீர்த்துக் கொள்கிறார்கள்.

இந்தக் கட்டுரையின் சாராம்சம் எப்படி வேண்டுமானாலும் உடுத்தலாம் என்பது இல்லை. ஒரு பெண் பிறந்ததிலிருந்து, விவரம் அறிந்ததிலிருந்து, சாகும் வரை இப்படி இரு..அப்படி இருஇப்படி உடுத்து… அப்படி உடுத்து.. என்று ஒவ்வொரு நொடியும் அவள் உடலைத் தவிர வேறு எதைப் பற்றியும் சிந்திக்க விடாமல் செய்வதைப் பற்றிச் சிந்திக்க.

# பாக்., ராணுவ முகாம் மீது தாக்குதல்: ஒன்பது பேர் பலி

பெஷாவர் பாகிஸ்தானில் ராணுவ முகாமின் மீது நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் ஒன்பது பேர் பலியாகினர் 16 பேர் காயமடைந்தனர்.

நம் அண்டை நாடான பாகிஸ்தானில் கைபர் பக்துன்வா மாகாணத்தின் பன்னுவில் ராணுவ முகாம் இயங்கி வருகிறது.

இந்த முகாமின் சுற்றுச்சுவர் மீது வெடிகுண்டுகள் நிரப்பப்பட்ட இரண்டு வாகனங்கள், நேற்று மாலை வேகமாக வந்து மோதின. இந்த தாக்குதலில் ஒன்பது பேர் பலியாகினர் 16 பேர் காயமடைந்தனர்.

தகவலறிந்து வந்த மீட்புக்குழுவினர், காயமடைந்தவர்களை மீட்டு, அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இதைத்தொடர்ந்து, தாக்குதல் நடத்திய பயங்கரவாதிகள், ராணுவ முகாமிற்குள் நுழைய முயன்றனர். அப்போது, பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில், ஆறு பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதையடுத்து, அப்பகுதி முழுதும் ராணுவக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

இந்த தற்கொலைப்படை தாக்குதலுக்கு, 'தெஹ்ரீக் – இ – தலிபான் பாகிஸ்தான்' என்ற பயங்கரவாதக் குழுவின் துணை அமைப்பான 'ஜெய்ஷ் – அல் – புர்சான்' என்ற அமைப்பு பொறுப்பேற்றுள்ளது. இந்த தாக்குதல் குறித்து உரிய விசாரணை நடத்த கைபர் பக்துன்வா மாகாண முதல்வர் உத்தரவிட்டதுடன், உயிரிழந்த நபர்களின் குடும்பத்திற்கு தன் இரங்கலை தெரிவித்துள்ளார். (ஐ)



# ஜப்பானில் 50 ஆண்டுகளில் இல்லாத காட்டுத்தீ! அணைக்க போராடும் 2,000 பேர்

டோக்கியோ: ஜப்பானில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவு ஒரு வாரமாக எரியும் காட்டுத்தீயை அணைக்க 2000க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் போராடி வருகின்றனர். உலக நாடுகளில் காட்டுத்தீ மோசமான சேதத்தை ஏற்படுத்தி வருகிறது. அண்மையில் அமெரிக்காவில் ஏற்பட்ட காட்டுத்தீயை உதாரணமாக கூறலாம்.


இந்நிலையில், ஜப்பானில் 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு பெரும் காட்டுத்தீ பரவி வருகிறது. ஒபுனாட்டோ காட்டு பகுதியில் 2100க்கும் அதிகமான ஹெக்டர் பரப்பளவில் காட்டுத்தீ கொழுந்துவிட்டு எரிகிறது.

காட்டுத்தீயினால் ஏராளமான வனப்பரப்பு எரிந்து சாம்பலான நிலையில், 80க்கும் மேற்பட்ட கட்டடங்கள் சேதம் அடைந்துள்ளன.

50 ஆண்டுகளில் இல்லாத தீ தற்போது பரவி வருகிறது. 84 வீடுகள் முழுமையாக சேதம் அடைந்துள்ளது. 4,000க்கும் அதிகமான மக்கள் மீட்கப்பட்டு பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

2000க்கும் அதிகமான தீயணைப்பு வீரர்கள் தீயை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டு இருக்கின்றனர். காட்டுத்தீயில் சிக்கி உயிரிழந்த ஒருவரின் உடல் மீட்கப்பட்டு உள்ளது. 16க்கும் மேற்பட்ட ஹெலிகாப்டர்கள் மூலம் நீரை பீய்ச்சி அடித்து காட்டுத்தீயை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இவ்வாறு அவர்கள் கூறினர். (ஐ)

# செர்பியா பார்லியில் புகைக்குண்டு வீச்சு




பெல்கிரேடு செர்பியா நாட்டின், பார்லிமென்டில் கடும் அமளியில் ஈடுபட்ட எதிர்க்கட்சி எம்.பி.,க்கள், வண்ண புகைக் குண்டுகளை வீசியது பரபரப்பை ஏற்படுத்தியது.

மத்திய மற்றும் தென்கிழக்கு ஐரோப்பிய நாடான செர்பியாவில், பிரதமர் மிலோஸ் உசெவிக் தலைமையில், செர்பிய முற்போக்கு கட்சி ஆட்சி நடக்கிறது. நான்கு மாதங்களுக்கு முன், இங்குள்ள ரயில் நிலையம் ஒன்றின் மேற்கூரை பெயர்ந்து விழுந்த விபத்தில், 15 பேர் பலியாகினர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து, அரசுக்கு எதிராக அந்நாட்டு மக்கள் தொடர் போராட்டம் நடத்தினர். இதனால் ஜனவரி இறுதியில், பிரதமர் பதவியை மிசோல் உசெவிக் ராஜினாமா செய்தார். எனினும் இதற்கு செர்பியா பார்லி., ஒப்புதல் தரவில்லை. செர்பியா சட்டப்படி, பிரதமர் ராஜினாமா செய்தால், பார்லி., ஒப்புதல் தர வேண்டும்.

இந்நிலையில் நேற்று, செர்பியா பார்லி., வழக்கம் போல் கூடியது. அப்போது, மிசோல் உசெவிக் ராஜினாமாவுக்கு உடனடியாக ஒப்புதல் தரக்கோரி, எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் அமளியில் ஈடுபட்டனர்.

சபாநாயகர் அனா பிரனாபிக்கை முற்றுகையிட்டு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால், நிலைமை மோசமானது. எதிர்க்கட்சி எம்.பி.,க்களை சபைக் காவலர்கள் தடுத்து நிறுத்த முயன்றனர்.

அப்போது அவர்களுக்கும், எம்.பி.,க்களுக்கும் இடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டது. இதனால், கோபமடைந்த எதிர்க்கட்சி எம்.பி.,க்கள், தாங்கள் கொண்டு வந்திருந்த கருப்பு மற்றும் இளஞ்சிவப்பு புகைக் குண்டுகள் மற்றும் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசினர். இதனால், பார்லி.,யில் புகை மண்டலம் சூழ்ந்தது. இந்த தாக்குதலில், மூன்று எம்.பி.,க்கள் காயமடைந்தனர். ஆளுங்கட்சி எம்.பி., ஜாஸ்மினா ஒப்ராடோவிக் என்பவருக்கு பக்கவாதம் ஏற்பட்டதை அடுத்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 2023 டிசம்பரில், நம் நாட்டின் லோக்சபாவுக்குள் அத்துமீறிய இருவர், வண்ண புகைக்குண்டுகளை வீசியது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பாக்., – ஆப்கன் எல்லையில் திடீர் மோதலால் பதற்றம்



பாகிஸ்தான் – ஆப்கன் எல்லையில் உள்ள டொர்காம் கிராசிங், மிகவும் முக்கியமான எல்லை பாதை. அந்த பகுதியில், பாகிஸ்தான் சோதனைச் சாவடியை அமைத்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையே முக்கிய வழித்தடமாக இருக்கும் இந்த பாதை வழியே, தினமும், ஆயிரக்கணக்கான லாரிகள் மற்றும் வாகனங்கள் சென்று வருவது வழக்கம்.

டொர்காம் கிராசிங் பகுதியில் ஆப்கன் புதிய சோதனைச்சாவடி கட்டுகிறது. இதற்கு, பாகிஸ்தான் எதிர்ப்பு தெரிவித்து வந்தது. நீறு பூத்த நெருப்பாக இருந்த மோதல் நேற்று முன்தினம் வெடித்தது. பாகிஸ்தான் படைகள் மீது ஆப்கன் வீரர்கள் திடீரென தாக்குதல் நடத்தினர்.

பதிலுக்கு பாகிஸ்தான் வீரர்களின் தாக்குதலில், ஒரு ஆப்கன் வீரர் சுட்டுக் கொல்லப்பட்டார் இன்னொருவர் படுகாயம் அடைந்தார்.

இதனால் எல்லையில் பதற்றம் நிலவுகிறது. இரு புறமும், 5,000க்கும் மேற்பட்ட சரக்கு லாரிகள் உள்ளிட்ட வாகனங்கள் காத்திருக்கின்றன. கடும் குளிரில் அந்த வாகனங்களின் டிரைவர்கள், எந்த பக்கமும் செல்ல முடியாமல் வாகனங்களிலேயே காத்து கிடக்கின்றனர்.

இதனால், ஆப்கனுக்கு கடும் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு, 5 கோடி ரூபாய்க்கும் மேல் இழப்பு ஏற்படுகிறது. இரு நாடுகளும் கூடுதல் வீரர்களை எல்லையில் குவித்து வருவதால், பதற்றம் தொடர்கிறது.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனுமதி வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தான் ஒரு கட்சித் தலைவர் என்றும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விஷயத்தை நாடாளுமன்றத்தில் பேச வாய்ப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாள் வெட்டு கும்பல்கள் , தனது பகுதிகளில் உள்ள மக்களை துண்டு துண்டாக வெட்டுகிறார்கள் என்றும், அவற்றை நாடாளுமன்றத்தில் சொல்ல வாய்ப்பு அளிக்க வேண்டும் எனவும் நாடாளுமன்ற பட்ஜெட் விவாதத்தில் கலந்து கொண்ட போது நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்தார். (ஐ)

## பணிப்புறக்கணிப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச தாதிய உத்தியோகத்தர்கள் சங்கம் தீர்மானித்துள்ளதாக அதன் ஒருங்கிணைப்பாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

வைத்தியர்களுடனான கலந்துரையாடலிலும் கூட அவர்கள் கோரிய கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுப்பதற்கு அரசாங்கம் தவறியுள்ளதால், தங்களுக்கு நியாயமான கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் எனக் கோரி நாளைய தினம் 3 மணிநேர பணிப்புறகணிப்பை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாளை காலை 10 மணி முதல் 3 மணித்தியாலங்களுக்கு இந்த பணிப்புறக்கணிப்பை முன்னெடுக்கவுள்ளனர்.

## ஆளும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“நாடாளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வா தொடர்பில் நான் கூறிய கருத்திற்கு மன்னிப்பு கோருகின்றேன். நான் வேறு ஒரு காரணத்திற்க்காகத் தான் அவ்வாறு கூறியிருந்தேன்.

நான் மாற்றுத்திறனாளிகளை ஏளனப்படுத்தும் விதமாக பேசி விட்டதாக சமூக ஊடகங்களிலும் என்னை விமர்சித்திருந்தனர்.

விசேட தேவை உடையோரை விமர்சிக்கும் எண்ணம் எனக்கில்லை. நான் ஒரு இதயமுள்ள மனிதன். விசேட தேவை உடையோரை தவிர்த்து விட்டு நான் நாட்டின் தீர்மானங்களை பற்றி கதைக்க மாட்டேன்.

அது மட்டுமன்றி சுகத் வசந்த டி சில்வா பல்கலைக்கழகத்தில் என்னுடன் படித்தவர். அவர் எனது பாடல்களையும் ரசித்துள்ளார்” எனத் தெரிவித்தார். (ஐ)

## ஜெரோம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இரண்டு நாட்கள் வாக்குமூலம் அளித்த பிறகு, ஜெரோம் பெர்னாண்டோ டிசம்பர் 2023 இல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் (சிஐடி) கைது செய்யப்பட்டார்.

மே 2023 இல், சபைக்கு முன்னால் புத்தர், இஸ்லாம் மற்றும் இந்து மதம் குறித்து அவதூறான கருத்துக்களை வெளியிட்டதாகக் கூறப்படும் இந்த போதகர், இலங்கை பொலிஸாரால் தேடப்பட்டார்.

அவரது கருத்துகளின் காணொளி காட்சிகள் நாட்டில் உள்ள புத்த மதத்தைப் பின்பற்றுபவர்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இந்த கொந்தளிப்பைத் தொடர்ந்து, ஜெரோம் பெர்னாண்டோ தனது சர்ச்சைக்குரிய அறிக்கைக்கு பல மன்னிப்புகளை வெளியிட்டார்.

சம்பவம் நடந்ததிலிருந்து கிட்டத்தட்ட ஆறு மாதங்கள் வெளிநாட்டில் இருந்த பிறகு அவர் இலங்கைக்கு வந்தபோது கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார் (ஐ)

# ஜி.எஸ், சமுர்த்தி மீது பாய்ந்தார் ஜீவன்



கொழும்பு, மார்ச் 05

பெருந்தோட்ட மக்கள் வாழும் தோட்ட பகுதிகளுக்கு கிராம உத்தியோகஸ்தர்கள் மற்றும் சமுர்த்தி உத்தியோகஸ்தர்கள் சரியான முறையில் தோட்டங்களுக்கு விஜயம் மேற்கொண்டு கடமையாற்றுகின்றார்களா? மேலும் அவர்கள் தங்கள் கடைமைகளுக்காக எத்தனை முறை வருகை தந்துள்ளார்கள்? என்று இ.தொ.கா பொதுச் செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், புதன்கிழமை (05) பாராளுமன்ற அமர்வில் கேள்வியெழுப்பினார்.

கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தொடர்பான ஒதுக்கீட்டுச் சட்டமூலம்- 2025 - குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

பெருந்தோட்ட வீடமைப்பு திட்டத்தில் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களை மாத்திரம் வீடமைப்பு திட்டத்தில் உள்வாங்காமல் தோட்டத்தில் வேலையில்லாமல் வெளியிடங்களில் தொழில் புரிந்து குறித்த தோட்டத்தில் வசிக்கும் அனைவருக்கும் வீடுகள் வழங்கப்படவேண்டும்.

மலையகத்தில் எல்லை நிர்ணயம் செய்யும்போது பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களையும் சரியான முறையில் உள்ளடக்கப்படவேண்டும்.

தோட்டபுற வைத்தியசாலைகளை அரசாங்க வைத்தியசாலைகளாக தரம் உயர்த்தப்பட வேண்டும். அத்தோடு தோட்ட சிறுவர் பாராமரிப்பு நிலையங்களின் உட்கட்டமைப்பு வசதிகளிலும் கவனம் செலுத்தப்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். (ஐ)

# புதுக்குடியிருப்பில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி: நால்வர் கைது





புதுக்குடியிருப்பு, மார்ச் 05

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட நால்வர் புதுக் குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் அதிரடியாக களமிறங்கிய பொலிஸார் நால்வரை கைது செய்துள்ளதுடன் கசிப்பு உற்பத்தி நிலையங்களில் களமிறங்கி 22 வரலும், கோடாக்கு பயன்படுத்தும் சுருள் , கோடா என்பனவற்றையும் கைப்பற்றியிருந்தனர்.

மன்னாகண்டல் , 10 ஆம் வட்டாரம், தேவிபுரம், சுதந்திரபுரம் , உடையார்கட்டு , வெள்ளப்பள்ளம் போன்ற பல்வேறு பகுதிகளில் களமிறங்கி தேடுதல் பணியின் மூலமே இவ்வாறு 4 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குறித்த சந்தேக நபர்களை நேற்றையதினம் முல்லைத்தீவு நீதிமன்றத்தில் முற்படுத்திய போது கசிப்பு உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒருவர் ஒரு லட்சம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், ஏனைய மூவரும் எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 30 தொடக்கம் 38 வயதுக்குட்பட்டோர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டுக்கு கொண்டு வரப்பட்ட சட்டவிரோத பால்மா!

*இன்று காலை மலேசியாவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இரண்டு நபர்கள் 1.8 மில்லியன் ரூபாய் பெறுமதியான உடலைப்பொலிவூட்ட பயன்படுத்தப்படும் விட்டமின்கள் அடங்கிய 179 டின் பால்மாவை நாட்டிற்கு கொண்டு வந்த நிலையில் விமான நிலைய சுங்க அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டனர்.*

*கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில் ஒருவர் நீர்கொழும்பை சேர்ந்தவர் என்றும், மற்றையவர் கொழும்பு, கொட்டாஞ்சேனையை சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.*

*மனித நுகர்வுக்கு ஏற்றதாக இருக்க வேண்டும் என்பதற்காக தேசிய ஔடதங்கள் அதிகாரசபையின் அனுமதி இல்லாமல் இந்த பால்மா தொகை நாட்டிற்கு கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.*

*கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் சந்தேகநபர்கள் இருவரையும் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுததுள்ளனர்.*







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.03.2025 இல் வெளியிடப்பெற்றது.